செ.வெ.எண்:- 37 நாள்: 16.02.2021

# பத்திரிக்கைச் செய்தி

மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரம் அளித்தல் அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் மத்திய அரசு நிறுவனமான அலிம்கோ பெங்க;ர் வாயிலாகவும் மாவட்ட நிர்வாகம் வாயிலாகவும் அரியலூர் மாவட்டத்தில் உள்ள 06 ஒன்றியங்களில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்களான மூன்று சக்கர சைக்கிள், மடக்கு சக்கர நாற்காலி, காதொலி கருவி, ஊன்று கோல், முடநீக்கு சாதனங்கள் (Calibre), நடைபயிற்சி உபகரணங்கள், செயற்கை கை, கால், மற்றும் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான சிறப்பு கல்வி உபகரணங்கள், தேவைப்படும் நபர்களை கண்டறிந்திட மேற்கண்ட நிறுவனம் வாயிலாக சிறப்பு முகாம்கள் நடத்திடவும் மற்றும் அச்சிறப்பு முகாமின் போது புதிதாக மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை வழங்கப்படவும் உள்ளது.

எனவே, திருமானூர் வட்டாரத்திற்கு திருமானூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் **17.02.2021** அன்றும், செந்துறை வட்டாரத்திற்கு செந்துறை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் **18.02.2021** அன்றும், ஜெயங்கொண்டம் வட்டாரத்திற்கு ஜெயங்கொண்டம் அரசு மேல்நிலைப்பள்ளியில் **19.02.2021** அன்றும், ஆண்டிமடம் வட்டாரத்திற்கு ஆண்டிமடம் அரசு மேல்நிலைப்பள்ளியில் **20.02.2021** அன்றும், தா.பழூர் வட்டாரத்திற்கு தா.பழூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் **22.02.2021** அன்றும், அரியலூர் வட்டாரத்திற்கு அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் **25.02.2021** அன்றும் காலை 10.00 மணி முதல் 02.00 மணி வரை முகாம்கள் நடைபெறவுள்ளது.

இந்த வாய்ப்பினை அரியலூர் மாவட்டதை சார்ந்த மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தி கொள்ளுமாறும், மத்திய அரசின் மாற்றுத்திறனாளிகளுக்கான தனித்துவம் வாயந்த அடையாள அட்டை இதுநாள் வரை விண்ணப்பிக்காத மாற்றுத்திறனாளிகள் விண்ணப்பித்து பயன்பெறுமாறு அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**